நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 12.01.2022

<u>சாத்தூர் நகர்மன்ற சாதாரணக் கூட்டம்</u>

**நிகழும் மங்களகரமான ஆண்டு பிலவ வருடம் மார்கழி 28 ஆம் நாள் 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய பொருட்கள் விவரம் பின்வருமாறு.**

**முன்னிலை : செல்வி. வே.நித்தியா, பி.டெக்., எம்.பிஏ.,**
**தனி அலுவலர்,**
**சாத்தூர் நகராட்சி.**

<u>பொருள் எண்: 1</u>

அரசாணை நிலை எண்.1 (படிகள்), நாள்: 01.01.2022ல் அரசு ஊழியர்களுக்கு 2020–21ஆம் ஆண்டில் பணிபுரிந்த **"சி மற்றும் டி''** பிரிவு பணியாளர்களுக்கு பொங்கல் போனசாக ரூ.3,000/–மும் மற்றும் சத்துணவு பணியாளர்களுக்கு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ரூ.1,000/–மும் வழங்க அரசாணை வரப்பெற்றுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

பதிவு செய்யலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 870, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.**

<u>பொருள் எண்: 2</u>

அரசாணை நிலை எண்.2 (ஓய்வூதியம்), நாள்:01.01.2022–ற்கு முன் ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் சத்துணவு பணியாளர்களுக்கு 2020–21 ஆம் ஆண்டிற்கு **"சி மற்றும் டி''** பிரிவு ஊழியர்களுக்கு பொங்கல் போனசாக ரூ.500/– வழங்க வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

பதிவு செய்யலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 871, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண்: 3</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.23688/2021/IT, 08.11.2021ல் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016 (**Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016)** விதி 5 துணை விதி (1) மூலம் சேவைகளை மின்னணு சேவை விநியோக (**Electronic Service Delivery System)** அமைப்பின்கீழ் https://tnurbanepay:tn.gov.in என்ற இணைதளம் மூலம் வழங்கப்படும் அறிவிப்பை விருதுநகர் மாவட்ட அரசிதழில் வெளியிட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.888/2021/சி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 872, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**
பொருள் எண்: 4

நகராட்சி பொது பிரிவில் உள்ள ஈப்பு வாகனம் TN 67 BA 5926 வண்டிக்கு காலமுறை பராமரிப்பு பணிகளை திருநெல்வேலி கொடை ஆட்டோ மொபைல்ஸ் லிமிடெட் மகேந்திரா & மகேந்திரா சர்வீஸ் சென்டர் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான செலவுத் தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

பழுது விபரம்

1. வாகனம் வாட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும்.
2. ஆயில் சர்வீஸ் செய்யவும், ஆயில் பில்டர், ஏர் பில்டர், டீசல் பில்டர்கள் புதிதாக மாற்ற வேண்டும்.
3. கிளைச் ஓவராயலிங் செய்ய வேண்டும்.
4. 4 வீல் பேரிங் செக்கப் பிரேக் லைன்ஸ் செக்கப் செய்து மாட்ட வேண்டும்.
5. கியர்பாக்ஸ், பிரேக், கிளைச், கிரவுன் ஆயில்கள் செக்கப் செய்து மாட்ட வேண்டும்.
6. பவர் ஸ்டேரிங் பெல்டு செக்கப் செய்து மாட்ட வேண்டும்.
7. ஸ்பிரிங் கட்டு பிரித்து டெம்பர் செய்து பில் புஸ் புதியது மாற்ற வேண்டும்.
8. இடது பக்க டோர் கதவு லாக் புதியது பேக் டோர் சவுண்டு செக்கப் செய்து மாட்ட வேண்டும்.
9. சைலன்ஸ்சர் ரப்பர் புஸ்கள் புதியது மாட்ட வேண்டும்.
10. வீல் அலாய்மெண்ட்டு செய்து மாட்ட வேண்டும்.
11. பேட்டரி, ஹைட்லைட் செக்கப் செய்து மாட்ட வேண்டும்.
12. லைபர் பிளேடு புதியது மாட்ட வேண்டும்.

(ந.க.எண். 862/2021/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 873, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 5

நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள மினி டேங்கர் லாரி TN 67B 7759 வண்டிக்கு இன்சியூரன்ஸ் வரும் 05.01.2022 உடன் முடிவடைதால் புதுப்பிக்கும் பொருட்டு அதற்கான தொகை ரூ.30,610/—க்கு நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 874, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 6

நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு ரூ.17,000/—க்கு திட்ட மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 875, நாள்: 12.01.2022**

**தீர்மானம் :  அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 7

சாத்தூர் நகராட்சியினால் **2021–2022–**ம் ஆண்டிற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் (KNMT) கீழ் ரூ.**49.50** லட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.**3** நியூ காலனியில் பூங்கா மற்றும் விளையாட்டு திடல் அமைக்கும் பணிகள் எடுத்து செய்வதற்கான மூன்றாம் முறையான ஒப்பந்தப்புள்ளி **24.12.2021–**ம் தேதியன்று கோரப்பட்டது. (Two Cover System) இதில் மிண்ணனு ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. ஆனால் நகராட்சியினால் நேரடியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்

1. திரு.பி.சுப்பாராஜ், கோவில்பட்டி.
2. திரு.எம்.கண்ணன், மதுரை.

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு **28.12.2021–**ம் தேதியன்று தொழில்நுட்ப அனுமதிக்கான ஒப்பந்தப்பள்ளியினை நகராட்சி ஒப்பந்தப்புள்ளி சீராய்வுக்குழு முன்னிலையில் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் திரு.எம்.கண்ணன் என்பவரின் தொழில்நுட்ப அனுமதிக்கான ஒப்பந்தப்புள்ளியில் போதிய ஆவணச் சான்றுகள் இணைக்கப்படாததால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த சீராய்வு குழுவினரால் நிராகரிக்கப்பட்டது. திரு.பி.சுப்பாராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியில் தொழில்நுட்ப தகுதிக்கான அனைத்து சான்றிதழ்களும் இணைக்கப்பட்டுள்ளதால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு இரு முறை ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. மூன்றாவது முறையாக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி.சுப்பாராஜ் என்பவர் மட்டும் போதிய ஆவணச் சான்று இணைக்கப்பட்டுள்ளதால் திட்ட பணியின் அவசியம் கருதி அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியில் விலைவிகித்திற்கான ஒப்பந்தப்புள்ளியினை **03.01.2022** அன்று ஒப்பந்த சீராய்வு குழு முன்னிலையில் திறக்கப்பட்டு பரிசீலினை செய்யப்பட்டது. அதில் மதிப்பீட்டை விட 5.88 % கூடுதலாக அளித்துள்ளார். திட்ட பணியில் அவசர அவசியம் கருதி கூடுதல் விலைவிகித புள்ளியினை மறு பரிசீலினை செய்யும் பொருட்டு விலைவிகித்தினை குறைத்து வழங்குமாறு **03.01.2022** அன்று ஒப்பந்தக்காரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. அதன்பொருட்டு ஒப்பந்தக்காரர் தமது **04.01.2022** தேதிய கடிதத்தில் விலைவிகித்தினை குறைத்து வழங்கப்பட்டு அதற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. மதிப்பீட்டை விட சற்று கூடுதலாக **4.70** சதவீதத்திற்கு விலைவிகித்தினை குறைத்து அளித்துள்ளார் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

இப்பணிக்கு **2** முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அதில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. **3–**வது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.பி.சுப்பாராஜ் என்பவர் மதிப்பீட்டை விட சற்று கூடுதலாக **4.70** சதவீதத்திற்கு பணியினை மேற்கொள்ள சம்மத கடிதம் அளித்துள்ளார். திட்ட பணியின் அவசர அவசியம் கருதி திட்ட மதிப்பீட்டிற்குள்ளே பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.**609/2021/**எம்**1)**

**நகர்மன்றத் தீர்மானம் எண். 876, நாள்: 12.01.2022**

**தீர்மானம் : திட்ட மதிப்பீட்டிற்குள்ளே பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வழங்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 8</u>

சாத்தூர் நகராட்சியில் **2021–2022**–ம் ஆண்டிற்கு **15**–வது நிதிக் குழு திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதிக்குட்பட்ட பைபாஸ் ரோட்டில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி **25** எச்.பி பம்ப் மோட்டார் சப்ளை செய்து பொருத்தும் பணி மேற்கொள்ளுவதற்கு **07.01.2022**–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் – மதிப்பீட்டை விட 0.03% குறைவு
2. திரு.பி.சுப்பராஜ் – மதிப்பீட்டை விட 0.55% அதிகம்

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணி என்பதினால் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.
**(ந.க.எண்.880/2021/எம்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 877, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 9</u>

சாத்தூர் நகராட்சியில் **2021–2022**–ம் ஆண்டிற்கு **15**–வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதிக்குட்பட்ட பைபாஸ் ரோட்டில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைவிடத்தில் மோட்டார் பம்ப் அறை அமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கு **07.01.2022**–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் – மதிப்பீட்டை விட 0.13% குறைவு
2. திரு.பி.சுப்பராஜ் – மதிப்பீட்டை விட 0.03% குறைவு

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணி என்பதினால் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.880/2021/எம்1)**

**நகர்மன்றத் தீர்மானம் எண். 878, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 10</u>

சாத்தூர் நகராட்சியில் **2021–2022**–ம் ஆண்டிற்கு **15**–வது நிதிக் குழு திட்டத்தின் கீழ் நகராட்சி குடிநீர் விநியோக பம்பிங் மெயின் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு தேவையான CI Sulice valve சப்ளை செய்து பொருத்தும் பணி மேற்கொள்ளுவதற்கு **07.01.2022**–ம் தேதியன்று

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.ஞானசேகரன் | – | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| 2. | திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் | – | மதிப்பீட்டை விட 0.07% அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.ஞானசேகரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணி என்பதினால் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.880/2021/எம்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 879, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 11

சாத்தூர் நகராட்சியில் **2021–2022–ம்** ஆண்டிற்கு **15–வது** நிதிக் குழு திட்டத்தின் கீழ் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான Baling Machine (50 Tone Capacity) சப்ளை செய்யும் பணி மேற்கொள்ளுவதற்கு **07.01.2022–ம்** தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.ஞானசேகரன் | – | மதிப்பீட்டை விட **0.03**% குறைவு |
| 2. | திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் | – | மதிப்பீட்டை விட 1.61% அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.ஞானசேகரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணி என்பதினால் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.880/2021/எம்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 880, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 12

விருதுநகர் மாவட்ட உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை விருதுநகர் அவர்களின் ப.வெ.**11**/அ**2/21**, நாள்:**17.12.2021**ம் தேதிய கடிதத்தின்படி சாத்தூர் நகராட்சிக்கு **2020–2021** ஆம் ஆண்டுக்கான தணிக்கை கட்டணம் ரூ.**77,579/–**ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 881, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 13</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31116/2021/அம்ரூட்–2, நாள்: 05.01.2022–ம் தேதிய கடிதத்தில் சாத்தூர் நகராட்சிக்கு 15–வது நிதிக்குழு மானியத்தின் Tied & UNTIED GRANT கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி தொகையில் பணிகளை எடுத்து செய்ய பட்டியலில் கண்டுள்ள பணிக்கு நிர்வாக அனுமதி அளிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| SI.No | Permission given in Tied &Untied grant in lakhs | |
|---|---|---|
| | **Tied Grant** | **Estimate Cost (Rs. In Lakhs)** |
| 1 | Construction of new toilet(6seats)at Wardno.16 North car street | **9.40** |
| | **Total tied Grant** | **9.40** |
| | **Untied Grant** | |
| 1 | Providing Resource Recovery Center (20m x 10m) at Compost Yard | 20.00 |
| 2 | Maintenance and repair work to flooring concrete, Water Supply and electrician arrangement and Construction of compound wall to Slaughter house | 10.00 |
| 3 | Providing Fencing work (L=150.00m) in park at Periyar nagar (opp to aqua arina) | 4.00 |
| **Total for Untied Grant** | | **34.00** |

**(ந.க.எண். 880/2021/எம்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 882, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : பார்வையிடப்பட்டது.**
<u>பொருள் எண்: 14</u>

நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண் 71, நாள் 13.09.2021 ன்படி நமக்கு நாமே திட்டத்தில் நகர் பகுதியில் உள்ள பொது மக்கள் பங்களிப்புடன் அடிப்படை வசதிகள் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி சாத்தூர் நகர் வார்டு எண்.1 பெரியார் நகரில் உள்ள குடியிருப்போர் நலச்சங்கத்தினர் தங்கள் பகுதியில் உள்ள பூங்காவில் விளையாட்டு உபகரணங்கள் வாங்கி செயல்படுத்த அரசு வழிகாட்டுதலின்படி ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் தங்களின் பங்கு தொகையாக ரூ.66,000/–னை அரசு கணக்கில் செலுத்தி திட்டத்தினை செயல்படுத்தி தரக் கோரியுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்,
**(ந.க.எண்.06/2022/எம்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 883, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : பார்வையிடப்பட்டது.**
<u>பொருள் எண்: 15</u>

நகர்மன்ற சாதாரண தேர்தலை முன்னிட்டு நகர் பகுதியில் உள்ள 35 வாக்குசாவடி மையங்களில் தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் மேலக்காந்தி நகர் சமுதாயகூடத்தில் உள்ள வார்டு எண்.12–க்குரிய வாக்குசாவடி மையம் தரைதளம் முற்றிலும் சேதமடைந்துள்ளது. எனவே அதனை சீரமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட ரூ.55,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.20/2022/எம்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 884, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 16</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10608/2021/எச்1, நாள்:10.11.2021–ல் தெரிவிக்கப்பட்டுள்ள விலைவிகிதத்தின் அடிப்படையில் இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் கொரோனா தடுப்பு பணிகளுக்கான கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் பொது சுகாதார அவசர அவசியம் கருதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வாங்குவதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.8,50,000/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்கள் | எண்ணிக்கை கிலோ / லிட்டர் | உத்தேச செலவுகள் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்பு தூள் | 10000 கிலோ | 90000 |
| 2 | பிளிச்சிங் பவுடர் | 2000 கிலோ | 80000 |
| 3 | Pyrethrum 2% | 200 லிட்டர் | 220000 |
| 4 | Temephos 50% | 100 லிட்டர் | 62500 |
| 5 | Bacillus Thuringiensis Powder | 20 கிலோ | 20940 |
| 6 | Disposable Mask | 25000 | 100000 |
| 7 | Reflector Jacket | 100 | 25000 |
| 8 | Synthetic Gloves | 200 Pair | 28000 |
| 9 | Black Phenyl | 300 லிட்டர் | 19500 |
| 10 | Toilet Cleaning Acid | 50 லிட்டர் | 2500 |
| 11 | Hand Sprayer (Battery Operated) 10லி Capacity | 6 | 60000 |
| | **Total** | | **708440** |

**(ந.க.எண்.23/2022/எச்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 885, நாள்: 12.01.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) செல்வி. வே.நித்தியா, பி.டெக்., எம்.பிஏ.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**மேலாளர்**
**சாத்தூர் நகராட்சி.**

**<u>சாத்தூர் நகர்மன்ற அவசரக் கூட்டம்</u>**

**நிகழும் மங்களகரமான ஆண்டு பிலவ வருடம் தை 11 ஆம் நாள் 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் நாள் திங்கள்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய பொருட்கள் விவரம் பின்வருமாறு.**

**முன்னிலை : செல்வி. வே.நித்தியா, பி.டெக்., எம்.பிஏ.,**
**தனி அலுவலர்,**
**சாத்தூர் நகராட்சி.**

<u>பொருள் எண்: 1</u>

சாத்தூர் நகராட்சியினால் 2021–2022–ம் ஆண்டிற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் (KNMT) கீழ் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிகள் எடுத்து செய்வதற்கான நான்காம் முறையான ஒப்பந்தப்புள்ளி 13.01.2022–ம் தேதியன்று கோரப்பட்டது. (Two Cover System) இதில் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. ஆனால் நகராட்சியினால் நேரடியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்

3. M/s M.H.T Engineering, Chennai.
4. M/s Yes Yes Jee Engineering, Chennai

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு 13.01.2022–ம் தேதியன்று தொழில்நுட்ப அனுமதிக்கான ஒப்பந்தப்பள்ளியினை நகராட்சி ஒப்பந்தப்புள்ளி சீராய்வுக்குழு முன்னிலையில் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் M/s Yes Yes Jee Engineering, Chennai என்பவரின் தொழில்நுட்ப அனுமதிக்கான ஒப்பந்தப்புள்ளியில் போதிய ஆவணச் சான்றுகள் இணைக்கப்படாததால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த சீராய்வு குழுவினரால் நிராகரிக்கப்பட்டது. M/s M.H.T Engineering, Chennai என்பவரின் ஒப்பந்தப்புள்ளியில் தொழில்நுட்ப தகுதிக்கான அனைத்து சான்றிதழ்களும் இணைக்கப்பட்டுள்ளதால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஒப்பந்தப்புள்ளியில் போதிய ஆவணங்கள் இணைக்கப்படாததால் நான்காவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/s M.H.T Engineering, Chennai என்பவர் மட்டும் போதிய ஆவணச் சான்று இணைக்கப்பட்டுள்ளதால் திட்ட பணியின் அவசியம் கருதி அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியில் விலைவிகித்திற்கான ஒப்பந்தப்புள்ளியினை 19.01.2022 அன்று ஒப்பந்த சீராய்வு குழு முன்னிலையில் திறக்கப்பட்டு பரிசீலினை செய்யப்பட்டது. அதில் மதிப்பீட்டை விட 4.96% கூடுதலாக அளித்துள்ளார். திட்ட பணியில் அவசர அவசியம் கருதி கூடுதல் விலைவிகித புள்ளியினை மறு பரிசீலினை செய்யும் பொருட்டு விலைவிகித்தினை குறைத்து வழங்குமாறு 19.01.2022 அன்று ஒப்பந்தக்காரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. அதன்பொருட்டு ஒப்பந்தக்காரர் தற்போது கூலி உயர்வு மற்றும் விலைவாசி ஏற்றத்தினை கருத்தில் கொண்டு குறைக்க இயலாது என தமது 20.01.2022 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

4–வது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் M/s M.H.T Engineering, Chennai நிறுவனத்தினர் மதிப்பீட்டை விட சற்று கூடுதலாக 4.96 சதவீதத்திற்கு பணியினை மேற்கொள்ள சம்மத கடிதம் அளித்துள்ளார். திட்ட பணியின் அவசர அவசியம் கருதி திட்ட மதிப்பீட்டிற்குள்ளே பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.608/2021/எம்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 886, நாள்: 24.01.2022**

**தீர்மானம் : திட்ட மதிப்பீட்டிற்குள் பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.**

பொருள் எண்: 2

சாத்தூர் நகராட்சியில் பொறியியல் பிரிவில் உள்ள தெருவிளக்கு வாகனம் TN 67 AC 5394 தகுதி சான்று பெறும் பொருட்டு வண்டியில் உள்ள பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 10.01.2022 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | M/s. Rahamathulla auto mobiles | – | ரூ. 37,408/– |
| 2. | M/s. Sitthiq auto mobiles | – | ரூ.39,700/– |

(ந.க.எண். 813/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 887, நாள்: 24.01.2022**
**தீர்மானம் : அனுமதி வழங்கப்படுகிறது.**

பொருள் எண்: 3

நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஜெட்ராய்டு வாகனம் TN 67 BK 1057 வண்டிக்கு தகுதிச்சான்று 27.01.2022 உடன் முடிவடைவதால் தகுதி சான்று பெறும் பொருட்டு கீழ்க்கண்ட பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மதுரை டிவிஎஸ் நிறுவனத்தின் மூலம் பார்க்கவும் அதற்கான செலவு தொகை ரூ.58,300/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

பழுது விபரம்

1. கம்பிளிட் வாட்டர் சர்வீஸ் செய்யவும்
2. கம்பிளிட் டிங்கர் ஒர்க்ஸ்ஸ் , ஏர்கிளீனர் அசெம்பிளி பார்க்கவும்
3. வாகனம் முழுவதும் பெயிண்டிங் அடிக்கவும்
4. கம்பிளிட் தகுதி சான்று வாசகங்கள் எழுதவும்
5. கம்பிளிட் எலெட்ரிக் வேலைகள் பார்க்கவும்
6. வேக கட்டுப்பாடு சர்டிபிக்கெட் வழங்கவும், கருவி மாற்றவும்
7. ஆன்லைன் ஸ்டிக்கர் ஒட்டவும்

(ந.க.எண். 22/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 888, நாள்: 24.01.2022**
**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண்: 4

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 30 HP Sub Motor பழுது ஏற்பட்டுள்ளது. அதனை பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.37,700/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை செய்தமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 21/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 889, நாள்: 24.01.2022**
**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**
பொருள் எண்: 5

சாத்தூர் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ள 20.01.2022–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆர்.தாமோதரகண்ணன் | – | மதிப்பீட்டை விட 2.11 % அதிகம் |
| 2. | பி.சுப்பாராஜ் | – | மதிப்பீட்டை விட 0.57% குறைவு |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள பி.சுப்பாராஜ் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.898/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 890, நாள்: 24.01.2022**
**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண்: 6

சாத்தூர் நகராட்சிக்கு நகர்மன்ற சாதாரண தேர்தலை முன்னிட்டு மேலக்காந்தி நகர் சமுதாயகூடத்தில் உள்ள வார்டு எண்.12–க்குரிய வாக்குசாவடி மையம் தரைதளம் சீரமைக்கும் பணி மேற்கொள்ள 20.01.2022–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆர்.தாமோதரகண்ணன் | – | மதிப்பீட்டை விட 0.90% அதிகம் |
| 2. | பி.சுப்பாராஜ் | – | மதிப்பீட்டை விட 0.24% குறைவு |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள பி.சுப்பாராஜ் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.20/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 891, நாள்: 24.01.2022**
**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண்: 7

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 24 முடிய உள்ள வார்டுகளில் வசிக்கும் அனைத்து மக்களும் 100சதவீதம் கழிப்பறைகளை மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர் என்றும், திறந்த வெளியினை கழிப்பிடமாக பயன்படுத்தவில்லை என்றும் சாத்தூர் நகராட்சி **OPEN DEFECATION FREE+ (ODF+)** என மத்திய அரசின் நகர்ப்புற வீட்டுவசதி அமைச்சகத்தின் மூலம் தரச்சான்றிதழ் ஏற்கனவே பெற்றுள்ள நிலையில் தற்போது இதனை புதுப்பிக்கும் விதமாக ODF+ சான்றிதழ் சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள் அனைவரும் தனிநபர் கழிப்பிடம், சமுதாய கழிப்பிடம் மற்றும் பொது கழிப்பிடம் மட்டுமே 100சதவீதம் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர் என்றும், திறந்த வெளியினை கழிப்பிடமாக பயன்படுத்தவில்லை என்றும் நகரினை **ODF+** என அறிவிப்பு செய்யவும் மற்றும் குப்பையில்லா நகரத்திற்கான 3 Star rating

சான்றிதழ் (GK) பெறுவதற்கும் சுய உறுதிமொழிக்கு (Self Declaration) மன்றத்தின் அங்கீகாரத்திற்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

மேலும், பொதுமக்கள் இப்பொருள் தொடர்பாக தங்களது ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் 15 தினங்களுக்குள் சாத்தூர் நகராட்சி ஆணையருக்கு கடிதம் அல்லது மின்னஞ்சல் வாயிலாக (commr.sattur@tn.gov.in) தெரிவிக்குமாறு கோரி நாளிதழில் விளம்பரம் செய்ய அனுமதிக்கும் அதற்கு ஆகும் செலவின தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 228/2022/எச்1)**

**நகர்மன்றத் தீர்மானம் எண். 892, நாள்: 24.01.2022**

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 8</u>

EPF Organization Regional Office, மதுரை அவர்களின் செயல்முறை ஆணை Diary No.100/2021, File No.MD/MDU/91193 Panel damages dated: 22.09.2021-U/S146 of the EPF October-1952-ன்படி சாத்தூர் நகராாட்சிக்கு **01.07.2019** முதல் **29.02.2020** (Wage month 7/16 to 8/2019) வரையிலான காலத்திற்கு EPF Damages Rs.4,46,176/- மற்றும் Interest Amount ரூ.2,14,824/–ஐ மேற்படி செயல்முறை ஆணை பெறப்பட்ட 15 நாட்களுக்குள் செலுத்தக்கோரி உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்படி Damage தொகை மற்றும் Interest தொகையினை செலுத்துவது தொடர்பாக Employees Provident Fund Appellant Tribunal, Chennai-யில் அப்பீல் மனு தாக்கல் செய்யலாம். மேற்படி அப்பீல் மனுவினை நகராட்சி சார்பாக தாக்கல் செய்யவும், வழக்காடவும் வழக்கறிஞர் திரு.எம்.பாண்டியராஜன், பி.ஏ., பி.எல்., அவர்களை அவசரம் அவசியம் கருதி நியமனம் செய்ததையும், அதற்காகும் வழக்குத் தொகைக்கும் மன்ற அனுமதி பெறலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 893, நாள்: 24.01.2022**

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

**(ஒம்) செல்வி. வே.நித்தியா, பி.டெக்., எம்.பிஏ.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**மேலாளர்**
**சாத்தூர் நகராட்சி.**